A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 60 / 2020**

திரு. M. சௌந்தரராசன்,
4/340 A, ஆயில்காரர் தோட்டம்,
பெத்தாம்பூச்சிபாளையம்,
சாமளாபுரம் அஞ்சல்,
மங்கலம் வழி, சோமனூர்,
திருப்பூர் மாவட்டம் – 641 663.

. . . . மேல்முறையீட்டாளர்
(திரு. M. சௌந்தரராசன்)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ&ப/சோமனூர்,
கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பவர் ஹவுஸ் வளாகம், சோமனூர் – 641 668.

2. உதவி செயற்பொறியாளர்/மஙகலம்,
கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சோமனூர் மெயின் ரோடு,
கனரா வஙகி எதிரில், மஙகலம் – 641 663.

3. உதவி மின்பொறியாளர்/ வேலாயுதம்பாளையம்,
கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
90/2D, சர்ச் ரோடு, பள்ளப்பாளையம் அஞ்சல்,
சாமளாபுரம், சோமனூர் – 641 663.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு.M.சுப்ரமணியன், செயற்பொறியாளர்/இ&ப/சோமனூர்
திரு.N.சென்ராம், உதவி செயற்பொறியாளர்/மஙகலம்,
திரு.K.சுரேஷ்பாபு, உதவி மின்பொறியாளர்/ வேலாயுதம்பாளையம்)

**<u>கேட்புரை நாள்: 20–01–2021</u>**

**<u>ஆணை நாள் : 06–04–2021</u>**

23.11.2020 அன்று பெறப்பட்ட திரு. M. சௌந்தரராசன், 4/340 A, ஆயில்காரர் தோட்டம், பெத்தாம்பூச்சிபாளையம், சாமளாபுரம் அஞ்சல், மங்கலம் வழி, சோமனூர், திருப்பூர் மாவட்டம் – 641 663 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 60/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 20.01.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பு கணக்கீடுகளில் விடுபட்ட தொகையை செலுத்தும்படி தெரிவித்த அறிவிப்பு கடிதத்தை ரத்து செய்யும்மாறு விண்ணப்பித்துள்ளார்.

**2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண் 295–003–592 மற்றும் 295–003–811–ற்கு 7/17 முதல் 11/17 முடிய உண்டான காலங்களுக்கு விடுபட்ட தொகை கண்டறியப்பட்டு ரூ. 40,825/– மற்றும் ரூ. 42,350/– ஐ செலுத்துமாறு உதவி மின்பொறியாளர்/வேலாயுதம்பாளையம் அவர்களின் கடிதம் பெற்றுள்ளார்.

2.2 அதனடிப்படையில் மேற்படி தொகையினை செலுத்திவிட்டதாகவும், மீண்டும் 1/16 முதல் 11/17 முடிய உண்டான காலத்திற்கு அபராதத் தொகை ரூ.2,47,507/– செலுத்துமாறு உதவி மின்பொறியாளர்/வேலாயுதம்பாளையம் அவர்கள் கடிதம் வழங்கியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். எனவே இது குறித்து, கோவை மின்பகிர்மான வட்டம்/தெற்கு, மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 27.06.2020 அன்று அணுகியுள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கோவை மின்பகிர்மான வட்டம்/தெற்கு 01.09.2020 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு</u> –

கோவை மின்பகிர்மான வட்டம்/தெற்கு, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 01.09.2020 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>உத்தரவு</u>*

*மின் இணைப்பு எண் **295–003–592** மற்றும் **295–003–811**–ன் சார்பாக எதிர்மனுதாரர்.**3** அவர்களால் **01.08.2019** அன்று வழஙகப்பட்ட அறிவிப்பு கடிதம், மேற்பார்வை பொறியாளர்/கோமிபவ/தெற்கு அவர்களின் அலுவலக ஆய்வு குழுவால் கணக்கிடப்பட்ட 3B வீதப்பட்டியல் மாற்ற கணக்கீடாகும். மேற்படி கணக்கிடப்பட்ட வீதப்பட்டியல் மாற்ற கணக்கீடானது. வீதப்பட்டியல் நிர்ணய ஆணை எண் **9/2014** நாள் **11.12.2014**–ன் படி சரியானதேயாகும். எனவே மின் இணைப்பு எண் **295–003–593** மற்றும் **295–003–811**–ன் தொடர்பாக விடுபட்ட தொகையான ரூ.2,06,682/– மற்றும் ரூ.74,632/–னை செலுத்தும்படி தெரிவித்து எதிர்மனுதாரர்.**3** அவர்களால் வழஙகப்பட்ட அறிவிப்பு கடிதத்தினை ரத்து செய்ய எந்த வழிவகையும் இல்லை எனத் தெரியவருகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

**4.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தஙகளது தரப்பு வாதஙகளை எடுத்துரைப்பதற்கு வசதியாக **20.01.2021** அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

**4.2** மேல்முறையீட்டாளர் திரு. M. சௌந்தரராசன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

**4.3** எதிர்மனுதாரர்கள் திரு.M.சுப்ரமணியன், செயற்பொறியாளர்/இ&ப/சோமனூர், திரு.N.சென்ராம், உதவி செயற்பொறியாளர்/மஙகலம் மற்றும் திரு.K.சுரேஷ்பாபு, உதவி மின்பொறியாளர்/ வேலாயுதம்பாளையம், கோவை மின்பகிர்மான வட்டம்/தெற்கு ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தஙகளுடைய வாதஙகளை எடுத்துரைத்தனர்.

**4.4** மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதஙகள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள்,

குறைதீர் மன்றத்தில் சமர்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதஙகள்:</u>**

**5.1** உதவி மின்பொறியாளர்/வேலாயுதம்பாளையம் அவர்கள் தனது **03.05.2019** தேதிய கடிதத்தில் மின் இணைப்பு எண் **295–003–592** மற்றும் **295–003–811**–ற்கு **7/17** முதல் **11/17** முடிய உண்டான காலஙகளுக்கு விடுபட்ட தொகை கண்டறியப்பட்டதாக கூறி முறையே ரூ. **40,825/–** மற்றும் ரூ. **42,350/–** ஐ செலுத்துமாறு கடிதம் வழஙகினார் என்றும் அதன் அடிப்படையில் **15.06.2019** மற்றும் **29.05.2019** ஆகிய நாட்களில் மேற்படி தொகையினை செலுத்திவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.2** உதவி மின் பொறியாளர்/வேலாயுதம்பாளையம் அவர்கள் மீண்டும் தனது **09.01.2020** தேதிய கடிதத்தில் மின் இணைப்பு எண் **295–003–592** ற்கு **1/16** முதல் **11/17** முடிய உண்டான காலத்திற்கு அபராதத் தொகை ரூ.**2,47,507/–** மற்றும் மின் இணைப்பு எண் **295–003–811**–ற்கு **1/17** முதல் **11/17** முடிய உண்டான காலத்திற்கு அபராதத் தொகை ரூ.**1,16,982/–**யும் செலுத்துமாறு கடிதம் வழஙகியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.3** முதலில் மின் இணைப்பு எண் **295–003–592** ற்கு முதல் தணிக்கை காலம் **1/17** முதல் **11/17** முடிய என்றும் பிறகு **1/16** முதல் **11/17** என்றும் மின் இணைப்பு எண் **295–003–811**–ற்கு முதல் தணிக்கை காலம் **7/17** முதல் **11/17** முடிய என்றும் பிறகு **1/17** முதல் **11/17** முடிய என்றும் எவ்வாறு தணிக்கையினை மேற்கொண்டார்கள் எனவும், தான் அதிகப்படியான மின் பளு பயன்படுத்தியதாகக் கூறி மின் இணைப்பு எண் **292–003–592**–ற்கு ரூ.**10,887.53** –ம், மின் இணைப்பு எண் **295–003–811**–ற்கு ரூ.**2,090.98**–ம் தன்னிடம் அபராதத் தொகை வசூல் செய்யப்பட்டுவிட்டது என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேலும், தான் அதிகப்படியான மின் பளுவைப் பயன்படுத்ததிய விபரம் கடிதம் மூலம் தனக்கு அறிவிக்கப்படவில்லை எனவும், மின் அட்டையிலும் தான் பயன்படுத்திய மொத்த மின்சாரத்தின் அளவு மற்றும் மொத்தத் தொகை மட்டுமே குறிக்கப்படுவதால் இது போன்ற விபரஙகள் தனக்கு தெரியாது என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.4** மின் இணைப்பு எண் **295–003–592–**ற்கு மின் வாரிய அலுவலகத்தில் பராமரிக்கப்படும் மின் நுகர்வோர் பதிவேட்டில் **29.11.2016–**ல் Load revised due to MD exceeded 2 or more time 7.46 kw --- 12.2kw என பதிவு செய்யப்பட்டுவிட்டு மீண்டும் **03.01.2018** அன்று Check loading for tariff change LA3A2 – LM3B என பதிவு செய்யப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இதன் படி தனக்கு **03.01.2018** முதல் தான் IIIB என வீதப்பட்டியல் மாற்றம் செய்யப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. அலுவலக ஆவணங்களில் கூறியுள்ளபடி எந்த அதிகாரியும் மின்பட்டியலை மட்டும் ஆய்வு செய்வதில்லை. அதிகப்படியாக பயன்படுத்தியதிற்கு உண்டான முறையான கடிதம் கொடுத்த உரிய காலத்தில் முறைப்படுத்தவும் இல்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.5** மின் இணைப்பு எண் **295–003–811–**ற்கு **29.11.2016** அன்று Load revised due to MD exceeded 2 or more time 7.22 kw --- 10.56 kw என மின் நுகர்வோர் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் ஆனல் அதிகப்படியான மின் பளு பயன்படுத்திய விபரம் குறித்து எந்தக் கடிதமும் மின் நுகர்வோருக்கு வழங்காமலும் வாரிய விதி முறைகள் குறித்து எந்த தகவலும் அளிக்காமலும் தன்னிச்சையாகவே அலுவலக ஆவணங்களில் பதிவேற்றம் மட்டும் செய்யப்பட்டுள்ளது என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**5.6** மேலும் **09.01.2015** அன்று முதல் வீதப்பட்டி IIIA- ல் இருந்து IIIB–க்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள நிலையில் **09.01.2018** முடிய IIIA(2)- ல் தான் பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0** **<u>எதிர்மனுதாரரின் வாதஙகள்:</u>**

**6.1** மின் நுகர்வோரின் விண்ணபத்தின் அடிப்படையில் மின் இணைப்பு எண் **295–003–811** வீதப்பட்டி IIIA2 ல் இருந்து IIIB ஆக **09.01.2018** அன்று வீதப்பட்டி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மின் இணைப்பு எண் **295–003–592** ஆனது வீதப்பட்டி IIIA2 ல் இருந்து IIIB ஆக **03.01.2018** அன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நுகர்வாரின் வேண்டுகோளின் பேரில் **28.02.2018** அன்று மின் இணைப்பு எண் **295–003–592** ஆனது மின் இணைப்பு எண் **295–003–811** – உடன் ஒருஙகிணைப்பு *(Merging of service)* செய்யப்பட்டு, மின் இணைப்பு எண் **295–003–592–**ன் கணக்குகள் முடிக்கப்பட்டுள்ளது.

**6.2** மின் இணைப்பு எண் **295–003–811** –ன் கணக்குகளை ஆய்வு செய்த போது, மேற்படி மின் இணைப்பில் **11/2015**ம் மாதம் 7.33 kw ஆகவும் **1/2016** ம் மாதம் 10.56 kw ஆகவும் மின் பளு அனுமதிக்கப்பட்ட மின் பளுவை விட கூடுதல் உபயோகம் செய்த காரணத்தினால் **11/2016–**ஆம் மாதத்தில் மின் நுகர்வோரின் அனுமதிக்கப்பட்ட மின்பளு **10.56** கிலோவாட்டாக முறைப்படுத்தப்பட்டது. ஆகவே Tariff Order எண் **09/2014** நாள் **11.12.2014** ன் படி இணைக்கப்பட்ட மின் பளுவானது 10 HP மேல் செல்லக்கூடாது என்றும் அவ்வாறு சென்றால் வீதப்பட்டி 3B வகையின் கீழ் வரும் என்று கூறப்பட்டுள்ளது. மற்றும் Tariff order எண் **01/2017** நாள் **11.08.2017** ன் படி அனுமதிக்கப்பட்ட மின் பளுவானது **12** கிலோவாட்டிற்கு மேல் செல்லக்கூடாது என்றும் அவ்வாறு சென்றால் வீதப்பட்டி 3B வகையின் கீழ் வரும் என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே **01/2017** முதல் **11/2017** வரையிலான காலகட்டத்திற்கு மேற்கண்ட Tariff Order களின்படி மேற்படி மின் இணைப்பு எண்ணிற்கு வீதப்பட்டி 3Bயில் கணக்கீடு செய்யப்பட்டது. அவ்வாறு கணக்கீடு செய்யப்பட்டு ஏற்கனவே வீதப்பட்டி 3A2 வில் செலுத்திய தொகையை கழித்து மீதம் செலுத்த வேண்டிய தொகை ரூ. **1,16,982/–** ஆகும்.

**6.3** அதேபோல் மின் இணைப்பு எண் **295–003–592–ல் 11/2015**ம் மாதம் **9.22**KW ஆகவும் **01/2016** ம் மாதம் **10.92** KW ஆகவும் **03/2016** ம் மாதம் **11.18** KW ஆகவும் **05/2016–**ம் மாதம் **11.18** KW ஆகவும் **07/2016–**ம் மாதம் **12.14** KW ஆகவும் **09/2016–**ம் மாதம் **12.20** KW **11/2016–**ம் மாதம் **12.20** KW ஆகவும் மின் பளு அனுமதிக்கப்பட்ட மின் பளுவை விட கூடுதல் உபயோகம் செய்த காரணத்தினால் **11/2016** ம் மாதத்தில் மின் நுகர்வோரின் அனுமதிக்கப்பட்ட மின் பளு **12.20** KW ஆக முறைப்படுத்தப்பட்டது. ஆகவே Tariff Order எண் **09/2014** நாள் **11.12.2014** மற்றும் Tariff Order எண். **01/2017** நாள் **11.08.2017** ன் படி **01/2016** முதல் **11/2017** வரையிலான காலகட்டத்திற்கு வீதப்பட்டி 3B யில் கணக்கீடு செய்யப்பட்டு வீதப்பட்டி 3A2 வில் செலுத்திய தொகையை கழித்து மீதம் செலுத்த வேண்டிய தொகை ரூ.**2,46,656/–** ஆகும் என தெரிவித்துள்ளார்.

**6.4** மேலும், இக்கோட்டத்தில் விசைத்தறி மின் இணைப்புகள் அதிகம் உள்ள காரணத்தால் Tariff Order எண் **01/2017** நாள் **11.08.2017–**ன்படி **11.08.2017** முதல் **11/2017** வரையான காலகட்டத்திற்கான தொகையை வசூல் செய்த பின்பு Tariff Order 11.08.2017 ன் காலத்திற்கு முன்பு அனுமதிக்கப்பட்ட மின் பளுவை விட கூடுதலாக உபயோகம் செய்த காலத்திற்கு நிலுவைத்தொகையை வசூல் செய்ய கலந்தாலோசித்து அதன் பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என கோட்டத்தில் முடிவு செய்யப்பட்ட காரணத்தால்

11.08.2017 முதல் 11/2017 வரையான காலகட்டணத்திற்கான செலுத்த வேண்டிய தொகையை மட்டும் மேல்முறையீட்டாளரிடம் ஏன் வசூல் செய்யக்கூடாது என்ற காரணம் கேட்கும் குறிப்பாணை (show cause notice) உதவி மின் பொறியாளர்/வேலாயுதம்பாளைம் அவர்களால் வழஙகப்பட்டு, மனுதாரரால் எவ்வித ஆட்சேபனையுமின்றி அந்த தொகைகள் செலுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

6.5 ஆனால் மனுதாரர் எவ்வித விளக்கமும் அளிக்காமல் மின் நுகர்வோர் குறைதீர்மன்றம்/கோவை மின் பகிர்மான வட்டம்/தெற்கில் 27.06.2020 அன்று மின் இணைப்பு எண் 295–003–811–மீதம் வசூல் செய்ய வேண்டிய தொகை ரூ.74,632/– மற்றும் 295–003–592–ல் வசூல் செய்ய வேண்டிய மீதமுள்ள தொகை ரூ.2,06,682/– ஆகியவற்றை இரத்து செய்ய கோரி மனு செய்திருந்தார். குறைதீர் மன்றம் மேற்கண்ட தொகைகளை செலுத்துமாறு 01.09.2020 அன்று தீர்ப்பு வழஙகியுள்ளதாகவும், எனவே, மேல்முறையீட்டாளரின் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர் கோரியுள்ளார்.

## 7.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

7.1 இருதரப்பு வாதஙகள் மற்றும் கொடுக்கப்பட்டுள்ள ஆவணஙகள் ஆகியவற்றை ஆராயும்போது மின் இணைப்பு எண் 295–003–592 மற்றும் 295–003–811–ன் தொடர்பாக விடுபட்ட தொகையான ரூ.2,06,682/– மற்றும் ரூ.74,632/–னை செலுத்தும்படி தெரிவித்து எதிர்மனுதாரர் அவர்களால் வழஙகப்பட்ட அறிவிப்பு கடிதத்தினை ரத்து செய்ய வேண்டுகிற மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதா ? என்பதாகும்.

7.2 உதவி மின்பொறியாளர்/வேலாயுதம்பாளையம் அவர்கள் தனது 03.05.2019 தேதிய கடிதத்தில் மின் இணைப்பு எண் 295–003–592 மற்றும் 295–003–811–ற்கு 7/17 முதல் 11/17 முடிய உண்டான காலஙகளுக்கு விடுபட்ட தொகை கண்டறியப்பட்டதாக கூறி முறையே ரூ.40,825/– மற்றும் ரூ.42,350/– ஐ செலுத்துமாறு கடிதம் வழஙகியதாகவும், தான் தொகையினை செலுத்திவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். ஆனால் உதவி மின் பொறியாளர்/வேலாயுதம்பாளையம் அவர்கள் மீண்டும் தனது 09.01.2020 தேதிய கடிதஙகளில் மின் இணைப்பு எண் 295–003–592 ற்கு 1/16 முதல் 11/17 முடிய உண்டான காலத்திற்கு அபராதத் தொகை ரூ.2,47,507/– மற்றும் மின் இணைப்பு எண்.295–003–811–ற்கு 1/17 முதல் 11/17 முடிய உண்டான காலத்திற்கு அபராதத் தொகை ரூ.1,16,982/–யும் செலுத்துமாறு கடிதம் வழஙகியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

7.3 முதலில் மின் இணைப்பு எண் **295–003–592** ற்கு முதல் தணிக்கை காலம் **7/17** முதல் **11/17** முடிய என்றும் பிறகு **1/16** முதல் **11/17** என்றும் மின் இணைப்பு எண் **295–003–811–**ற்கு முதல் தணிக்கை காலம் 7/17 முதல் **11/17** முடிய என்றும் பிறகு **1/17** முதல் **11/17** முடிய என்றும் எவ்வாறு தணிக்கையினை மேற்கொண்டார்கள் எனவும் தான் அதிகப்படியான மின் பளு பயன்படுத்தியதாகக் கூறி மின் இணைப்பு எண் **292–003–592–**ற்கு ரூ.**10887.53 –**ம், மின் இணைப்பு எண் **295–003–811–**ற்கு ரூ.**2090.98–**ம் தன்னிடம் அபராதத் தொகை வசூல் செய்யப்பட்டுவிட்டது என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேலும், தான் அதிகப்படியான மின் பளுவைப் பயன்படுத்தகிய விபரம் கடிதம் மூலம் தனக்கு அறிவிக்கப்படவில்லை எனவும், மின் அட்டையிலும் தான் பயன்படுத்திய மொத்த மின்சாரத்தின் அளவு மற்றும் மொத்தத் தொகை மட்டுமே குறிக்கப்படுவதால் இது போன்ற விபரஙகள் தனக்கு தெரியாது என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 மின் இணைப்பு எண் **295–003–592–**ற்கு மின் வாரிய அலுவலகத்தில் பராமரிக்கப்படும் மின் நுகர்வோர் பதிவேட்டில் **29.11.2016–**ல் Load revised due to MD exceeded 2 or more time 7.46 kw --- 12.2kw என பதிவு செய்யப்பட்டுவிட்டு மீண்டும் **03.01.2018** அன்று Check reading for tariff change LA3A2 – LM3B என பதிவு செய்யப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இதன் படி தனக்கு **03.01.2018** முதல் தான் IIIB என வீதப்பட்டியல் மாற்றம் செய்யப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை என்றும் அதிகப்படியாக பயன்படுத்தியதிற்கு உண்டான முறையான கடிதம் கொடுத்து உரிய காலத்தில் முறைப்படுத்தவும் இல்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் மின் இணைப்பு எண் **295–003–811** –ன் கணக்குகளை ஆய்வு செய்த போது, மேற்படி மின் இணைப்பில் **11/2015**ம் மாதம் 7.33 kw ஆகவும் **1/2016** ம் மாதம் 10.56 kw ஆகவும் கூடுதல் உபயோகம் செய்த காரணத்தினால் **11/2016–**ஆம் மாதத்தில் மின் நுகர்வோரின் அனுமதிக்கப்பட்ட மின்பளு **10.56** கிலோவாட்டாக முறைப்படுத்தப்பட்டது. ஆகவே Tariff Order எண் **09/2014** நாள் **11.12.2014** ன் படியும், Tariff order எண் **01/2017** நாள் **11.08.2017** ன் படியும் மின்பளு கூடுதலாக உபயோகம் செய்யப்பட்டதால் வீதப்பட்டி 3B வகையின் கீழ் வரும் என்பதால் **01/2017** முதல் **11/2017** வரையிலான காலகட்டத்திற்கு மேற்கண்ட Tariff Order களின்படி மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்புகளுக்கு வீதப்பட்டி 3Bயில் கணக்கீடு செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

அவ்வாறு கணக்கீடு செய்யப்பட்டு ஏற்கனவே வீதப்பட்டி 3A2 வில் செலுத்திய தொகையை கழித்து மீதம் செலுத்த வேண்டிய தொகை ரூ. 1,16,982/– என்றும் தெரிவித்துள்ளார்.

7.6 அதேபோல் மின் இணைப்பு எண் 295–003–592–ல் 11/2015ம் மாதம் 9.22KW ஆகவும் 01/2016 ம் மாதம் 10.92 KW ஆகவும் 03/2016 ம் மாதம் 11.18 KW ஆகவும் 05/2016–ம் மாதம் 11.18 KW ஆகவும் 07/2016–ம் மாதம் 12.14 KW ஆகவும் 09/2016–ம் மாதம் 12.20 KW 11/2016–ம் மாதம் 12.20 KW ஆகவும் மின் பளு அனுமதிக்கப்பட்ட மின் பளுவை விட கூடுதல் உபயோகம் செய்த காரணத்தினால் 11/2016 ம் மாதத்தில் மின் நுகர்வோரின் அனுமதிக்கப்பட்ட மின் பளு 12.20 KW ஆக முறைப்படுத்தப்பட்டது. ஆகவே Tariff Order எண் 09/2014 நாள் 11.12.2014 ன் படியும், Tariff order எண் 01/2017 நாள் 11.08.2017 ன் படியும் மின்பளு கூடுதலாக உபயோகம் செய்யப்பட்டதால் வீதப்பட்டி 3B வகையின் கீழ் வரும் என்பதால் 01/2016 முதல் 11/2017 வரையிலான காலகட்டத்திற்கு மேற்கண்ட Tariff Order களின்படி மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்புகளுக்கு வீதப்பட்டி 3Bயில் கணக்கீடு செய்யப்பட்டு வீதப்பட்டி 3A2 வில் செலுத்திய தொகையை கழித்து மீதம் உள்ள ரூ.2,46,656/– ஐ செலுத்த கேட்பு செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேலும், கோட்டத்தில் விசைத்தறி மின் இணைப்புகள் அதிகம் உள்ள காரணத்தால் Tariff Order எண் 01/2017 நாள் 11.08.2017–ன்படி 11.08.2017 முதல் 11/2017 வரையான அனுமதிக்கப்பட்ட மின் பளுவை விட கூடுதலாக உபயோகம் செய்த காலத்திற்கு நிலுவைத்தொகையை வசூல் செய்ய கலந்தாலோசித்து அதன் பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என கோட்டத்தில் முடிவு செய்யப்பட்ட காரணத்தால் மேற்கண்ட தொகையில் 11.08.2017 முதல் 11/2017 வரையான காலத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை கேட்பு அறிவிக்கை உதவி மின்பொறியாளர்/வேலாயுதம்பாளையம் அவர்களால் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட தணிக்கை தொகை Tariff Order எண் 09/2014, நாள் 11.12.2014 மற்றும் Tariff Order எண். 01/2017 நாள் 11.08.2017 ன் படி 01/2016 முதல் 11/2017 வரையிலான காலகட்டத்திற்கு வீதப்பட்டி 3B யில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளதால், நான் சம்பந்தப்பட்ட மின் கட்டண ஆணைகளை ஆராய விரும்புகிறேன். மின் கட்டண ஆணையின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ Tariff Order எண் 09/2014 நாள் 11.12.2014*

*6.17. தாழ்வழுத்த மின்கட்டணம் – III-A(1):*

*மின்கட்டண அட்டவணை*

*********

*i. இந்த மின்கட்டணவகையின் கீழுள்ள மின்வழுஙகலுக்காக இணைப்பு பெற்ற மின்சுமை 10 குதிரை சக்திக்கு மேற்படுதல் ஆகாது.*

*ii. இந்த மின்கட்டணம், 1951 ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 65/1951) முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட தொழில்கள் எவையும் சம்பந்தமான பொருள்கள் உற்பத்தி செய்வதில் அல்லது தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள குடிசைத் தொழில் மற்றும் குறுந்தொழில்கள், குறுதொழில் நிறுவனஙகளுக்கு பொருந்தக்கூடியதாகும்.*

*******

*6.19 தாழ்வழுத்த மின்கட்டணம் – III – B*

*மின்கட்டண அட்டவணை*

*********

*i. இந்த மின்கட்டணம், தாழ்வழுத்த மின்கட்டணம் III A (1) மற்றும் III -A(2) இன் கீழ் வராத அனைத்து தொழில்களுக்கும் பொருந்தக்கூடியதாகும். தாழ்வழுத்த மின்கட்டணம் IIIA(1) மற்றும் IIIA(2) இன் கீழ்வரும் அனைத்து தொழில்களும், அத்தகைய தொழில்கள் இணைப்புப் பெற்ற மின்சுமை 10 குதிரை சக்திக்கு மேற்படுமானால் இந்த மின்கட்டண வகையின் கீழ் வரும்.*

******** ”*

*Tariff order எண் 01/2017 நாள் 11.08.2017*

***6.2.9 தாழ்வழுத்த மின்கட்டணம் III-A (1):***

*மின்கட்டண அட்டவணை*

*********

*6.2.9.1 இந்த மின்கட்டண வகையின் கீழுள்ள மின்வழுஙகலுக்கான ஒப்பந்த மின்சுமை 12 கிலோவாட்டுக்கு மேற்படுதல் ஆகாது.*

******** ”*

***6.2.11 தாழ்வழுத்த மின்கட்டணம் III – B :***

*மின்கட்டண அட்டவணை*

*********

**6.2.11.1** இந்த மின்கட்டணம், தாழ்வழுத்த மின்கட்டணம் III A (1) மற்றும் III -A(2) இன் கீழ் வராத அனைத்து தொழிற்சாலைகளுக்கும் பொருந்தக்கூடியதாகும். தாழ்வழுத்த மின் கட்டணம் IIIA(1) மற்றும் IIIA(2) இன் கீழ்வரும் அனைத்து தொழிற்சாலைகளுக்கும் அத்தகைய தொழிற்சாலைகளுக்கான இணைப்புப் பெற்ற மின்சுமை 12 கிலோவாட்டுக்கு மேற்படுமானால் இந்த மின்கட்டண வகையின் கீழ் வரும்.

******** ”*

7.9 மேலேயுள்ள மின் கட்டண ஆணை 9/2014–ன் படி ஒரு நுகர்வோரின் தாழ்வழுத்த மின்சுமை 10 குதிரை சக்திக்கு மேற்படாமல் இருக்குமானால் தாழ்வழுத்த மின்கட்டணமானது III A (1) –ல் வகைப்படுத்தப்படும் என தெரிகிறது. தாழ்வழுத்த மின்கட்டணம் IIIA(1)ல் பெற்ற மின்சுமை 10 குதிரை சக்திக்கு மேற்படுமானால் அத்தகைய தொழில்களுக்காக இணைப்பு பெற்ற மின்கட்டண வீதமானது IIIB–ல் வகைப்படுத்தப்படும். அதேபோல் மின் கட்டண ஆணை 1/2017 நாள் 11.08.2017 ன்படி ஒரு நுகர்வோரின் தாழ்வழுத்த மின்சுமை 12kw-க்கு மேற்படாமல் இருக்குமானால் தாழ்வழுத்த மின்கட்டணமானது III A (1) –ல் வகைப்படுத்தப்படும் என தெரிகிறது. தாழ்வழுத்த மின்கட்டணம் IIIA(1)ல் பெற்ற மின்சுமை 12kw-க்கு மேற்படுமானால் அத்தகைய தொழில்களுக்காக இணைப்பு பெற்ற மின்கட்டண வீதமானது IIIB–ல் வகைப்படுத்தப்படும் என அறிய முடிகிறது.

7.10 இவ்வழக்கில் மேற்முறையீட்டாளரின் மின்னிணைப்பின் மின்சுமையானது அனுமதிக்கப்பட்ட மின்சுமையை விட அதிகமாக பயன்படுத்தியது கண்டறியப்பட்டு உரிமதாரரால் மிகைதொகையாக மின் இணைப்பு எண் 292–003–592–ற்கு ரூ.10887.53 –ம், மின் இணைப்பு எண் 295–003–811–ற்கு ரூ.2090.98–ம் வசூல் செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் 10 HP(T.O 9 of 2014) / 12 KW (T.O 1 of 2017) -க்குள் இருந்தால் தான் IIIA1ல் வழங்க முடியும் என்றும் இல்லையேல் IIIBல் தான் மின்சாரம் வழங்க இயலும் என்ற பரிந்துரையின் அடிப்படையில் கூடுதல் தொகை செலுத்த மேல்முறையீட்டாளருக்கு அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

7.11 மேல்முறையீட்டாளரோ மேற்கண்ட மின்னிணைப்புகளுக்கு Load revised due to MD exceeded 2 or more time என மின் நுகர்வோர் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆனல் அதிகப்படியான மின் பளு பயன்படுத்திய விபரம் குறித்து எந்தக் கடிதமும் மின் நுகர்வோருக்கு வழுங்காமலும் வாரிய விதி முறைகள் குறித்து எந்த தகவலும் அளிக்காமலும் தன்னிச்சையாகவே அலுவலக ஆவணங்களில் பதிவேற்றம் மட்டும் செய்யப்பட்டுள்ளது என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேலும் அதிகப்படியாக பயன்படுத்தியதிற்கு உண்டான முறையான கடிதம் கொடுத்து உரிய காலத்தில் முறைப்படுத்தவும் இல்லை என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். எனவே, IIIA1- ல் இருந்து IIIB–க்கு மாற்றம் செய்யப்பட்ட நாளில் இருந்துதான் IIIB ல் பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

**7.12** பத்தி **7.11** ல் உள்ள மேல்முறையீட்டாளரின் வாதப்படி அதிகப்படியாக பயன்படுத்தியதிற்கு உண்டான முறையான கடிதம் கொடுத்து உரிய காலத்தில் முறைப்படுத்தவில்லை என்றும், IIIA1- ல் இருந்து IIIB–க்கு மாற்றம் செய்யப்பட்ட நாளில் இருந்துதான் IIIB ல் பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். இது போன்ற நிலையில் உரிமதாரரின் கடமைகள் மற்றும் மேற்கொண்டிருக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிந்து கொள்ள தமிழ்நாடு மின்சார வழுங்கல் விதி 5(2) -ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**(2) Excess demand charge***

*Whenever the consumer exceeds the sanctioned demand, excess demand charge shall be:—*

*(i) """"*

*(ii) In case of LT supply,*

*(a) For Domestic and Agricultural category of service, the excess demand charges shall not be applicable.*

*(b) For other categories of LT services with contracted demand equal to or less than 18.6 KW (25 HP), the excess demand charges shall not be applicable where the connected load is equal to or less than the contracted demand.*

*Note: For services with contracted demand less than or equal to 18.6 KW (25 HP), whenever the consumer's connected load exceeds the contracted demand, the licensee shall install meters with demand recording facility and bring the consumer under the scope of excess demand chargeable category. After installation of the meter, if the recorded demand is in excess of contracted demand, the existing demand, shall, after intimation to the consumer, be revised to the level of recorded demand and all relevant charges applicable for extension of additional demand shall be included in the next bill. No excess demand charge is leviable till such time the licensee installs meter with demand recording facility and bring the consumer under the scope of excess demand chargeable category.*

*(c) For the remaining LT services other than those service connections covered in (a) and (b) above, when the contracted demand is in excess of 18.6KW (25HP) and for such of those consumers whose contracted demand is less than 18.6 KW (25HP) but opted for having meters with demand recording facility, the excess demand charges shall be -,*

*(I) Where the recorded demand does not exceed 112 KW, for every KW or part thereof in excess of the sanctioned demand, at the rate of 1% of the total energy charges;*

*(II) Where the recorded demand exceeds 112KW, for every KW or part thereof in excess of sanctioned demand:-*

*- at the rate of 1% of the charges for electricity supplied upto 112 kW*

*- and at the rate of 1.5% for every KW or part thereof over and above 112KW for the first two occurrences;*

*- and for the third occurrence, at the rate of 3% for every KW or part thereof over and above 112KW;*

*- and thereafter, that is the fourth and subsequent occurrences at the rate of 10% for every KW or part thereof over and above 112KW;*

*(III) Where the recorded demand exceeds the sanctioned demand for the second and subsequent times,-*

*(A) In case the recorded demand has not exceeded 112 KW, the existing load sanction shall, after intimation to the consumer, be revised within one month of the second occurrence to the level of recorded demand and all the relevant charges applicable to the additional load shall be included in the next bill ;*

*(B) In case the recorded demand has exceeded 112 KW, the existing load sanction shall, after intimation to the consumer, be revised within one month of the second occurrence, to the level of 112 KW and all relevant charges applicable to the additional load shall be included in the next bill; if, however, the recorded demand has exceeded 112 KW for the third or more number of times, it is open to the consumer to opt for HT service."*

7.13 மேற்கண்ட விதிகளின் படி ஒப்பளித்த (sanctioned) மின்தேவையை மிஞ்சிவிட்டால் நுகர்வோர் செலுத்த வேண்டிய மிகை மின் தேவைக் கட்டணம் தாழ்வழுத்த (LT) மின் வழஙகலைப் பொறுத்த வரையில் வீட்டு, வேளாண்மை மின்னிணைப்புகளுக்கு மிகை மின் தேவைக் கட்டணம் பொருந்தாது எனவும், 18.6 கி.வா (25 HP) அளவுக்குச் சமமாகவோ அல்லது அதற்கும் குறைவாகவோ ஒப்பந்த மின் தேவையும் இணைந்துள்ள மின்சுமையும் உள்ள பிறவகை தாழ்வழுத்த மின்னிணைப்புகளுக்கு மிகை மின் தேவைக்கட்டணம் பொருந்தாது எனவும் அறிய முடிகிறது.

7.14 மேலும், நுகர்வோரின் ஒப்பந்த மின்தேவை 18.6 கி.வா (25 HP) அளவுக்குச் சமமாகவோ அல்லது குறைவாகவோ இருந்தாலும் இணைந்துள்ள சுமை ஒப்பந்த மின் தேவையினும் அதிகமாகவும் ஆனால் 18.6 கி வா (25 HP) அளவுக்கு, நிகழ்விற்கேற்ப, குறைவாக இருந்தாலும் உரிமதாரர் மிகை மின் தேவையைப் பதிவு செய்யும் வசதியுள்ள மின்னளவியை நிறுவி அவரை மிகை மின் தேவைக் கட்டணஞ் செலுத்தும் வகையினத்துக்குள் கொணர வேண்டும் என்றும், மின்னளவி நிறுவிய பிறகு, பதிவாகும் மின்

தேவை, ஒப்பந்த மின் தேவையினும் மிகையாக இருந்தால், நுகர்வோருக்கு முறையாக அறிவிப்பு தந்து விட்டு நிலவும் மின் தேவையை, பதிவான மின் தேவையளவுக்குத் திருத்தி அடுத்த பட்டியலில் மிகை மின் தேவைக் கட்டணத்துக்கு விதிக்கும் அனைத்துக் கட்டணஙகளையும் உடன் சேர்க்க வேண்டும் என்றும், மிகை மின் தேவையைப் பதிவு செய்யும் மின்னளவியை நிறுவி, நுகர்வோரை மிகை மின் தேவைக் கட்டணம் செலுத்தும் வகையினத்துக்குள் கொண்டு வந்து நுகர்வோருக்கு முறையாக அறிவிக்காத வரையில் உரிமதாரர் மிகை மின் தேவைக் கட்டணத்தை விதிக்கக் கூடாது என்றும் தெரிகிறது.

7.15 அடுத்து பதிவாகும் மின் தேவை மிகையாகும் போது, பதிவான மின்தேவை 112 கி.வா அளவினும் மிகுதியாகாத போது, நுகர்வோருக்கு அறிவிப்பு தந்துவிட்டபிறகு நிலவும் சுமை ஒப்பளிப்பை இரண்டாம் முறை நேர்விலிருந்து ஒரு மாதத்துக்குள் பதிவான மின்தேவைக்கு ஏற்ப மாற்றி விட்டு கூடுதல் சுமை தருவதற்கு விதிக்கப்படும் அனைத்து கட்டணஙகளையும் அடுத்த பட்டியலில் உடன் சேர்க்க வேண்டும் எனவும் தெரிகிறது.

7.16 எனவே, பத்தி 7.13, 7.14 மற்றும் 7.15 உள்ள தீர்வுகளின்படி ஒப்பந்த மின் தேவையைவிட ஒரு நுகர்வோர் அதிகமாக பயன்படுத்தும் போது நுகர்வோருக்கு அறிவிப்பு தந்துவிட்டபிறகு நிலவும் சுமை ஒப்பளிப்பை இரண்டாம் முறை நேர்விலிருந்து ஒரு மாதத்துக்குள் பதிவான மின்தேவைக்கு ஏற்ப மாற்றி விட்டு கூடுதல் சுமை தருவதற்கு விதிக்கப்படும் அனைத்து கட்டணஙகளையும் அடுத்த பட்டியலில் உடன் சேர்க்க வேண்டும் எனவும் தெரிகிறது. மேலும் அவ்வாறு அறிவிக்காத வரையில் உரிமதாரர் மிகை மின் தேவைக் கட்டணத்தை விதிக்கக் கூடாது என்றும் தெரிகிறது.

7.17 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 295–003–592 மற்றும் 295–003–811 ஆகியவற்றில் அதிகமாக மின் பளு உபயோகிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு உபயோகப்படுத்தப்பட்ட அதிகமான மின்பளுவானது எந்தவொரு அறிவிப்புமின்றி எதிர்மனுதாரரால் முறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு முறைப்படுத்தபட்ட பொழுதே மேற்கண்ட மின்னிணைப்புகள் IIIA1 வீதப்பட்டியில் வராது என்று அறிந்திருக்கவேண்டும். ஆனால் மின்பளு முறைப்படுத்தப்பட்டு பல மாதஙகள் கழித்துதான் சம்பந்தப்பட்ட மின்னிணைப்புகளின் வீதப்பட்டி மாற்றப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு மாற்றப்பட்டபொழுது வீதப்பட்டி மாற்றஙகளுக்குண்டான தமிழ்நாடு மின்வழஙகல் விதிகள் கடைப்பிடிக்கப்படவில்லை.

7.18 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு இணங்க முறையான அறிவிக்கை ஏதுமின்றி மேல்முறையீட்டாளரிடமிருந்து விகிதப்பட்டி மாற்றித்திற்குண்டான கூடுதல் கட்டணம் கேட்பு செய்தது ஏற்புடையதாக இல்லை. மேலும், அவ்வாறு முறைப்படி அறிவிக்கை செய்யாத நேர்வில் அவர் தாழ்வழுத்த மின்கட்டணம் IIIA(1) -லேயே தொடர்வதாகத்தான் கருதவேண்டும். எனவே, உதவி மின் பொறியாளர்/வேலாயுதம்பாளைம் அவர்களின் 09.01.2020 நாளிட்ட கேட்பு அறிவிக்கையின்படி மின்னிணைப்பு எண். 295–003–811–ல் கோரப்பட்ட தொகை ரூ.1,16,982/– மற்றும் மின் இணைப்பு எண் 295–003–592–ல் கோரப்பட்ட தொகை ரூ.2,47,507/– ஆகியவை தள்ளுபடி செய்யப்படுகிறது என தீர்வு செய்யப்படுகிறது. மேலும் மேற்கண்ட மின்னிணைப்புகளில் ஏற்கனவே செலுத்தப்பட்ட கேட்புத் தொகையை மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பில் வரவு வைத்து எதிர்வரும் மின் கட்டணங்களில் சரிசெய்து கொள்ளுமாறு எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

## 8.0 முடிவுரை

8.1 பத்தி 7 உள்ள தீர்வுகளின்படி ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு இணங்க முறையான அறிவிக்கை ஏதுமின்றி மேல்முறையீட்டாளரிடமிருந்து விகிதப்பட்டி மாற்றித்திற்குண்டான கூடுதல் கட்டணம் கேட்பு செய்தது ஏற்புடையதாக இல்லை. மேலும், அவ்வாறு முறைப்படி அறிவிக்கை செய்யாத நேர்வில் அவர் தாழ்வழுத்த மின்கட்டணம் IIIA(1) -லேயே தொடர்வதாகத்தான் கருதவேண்டும். எனவே, உதவி மின் பொறியாளர்/வேலாயுதம்பாளையம் அவர்களின் 09.01.2020 நாளிட்ட கேட்பு அறிவிக்கையின்படி மின்னிணைப்பு எண். 295–003–811–ல் கோரப்பட்ட தொகை ரூ.1,16,982/– மற்றும் மின் இணைப்பு எண் 295–003–592–ல் கோரப்பட்ட தொகை ரூ.2,47,507/– ஆகியவை தள்ளுபடி செய்யப்படுகிறது என தீர்வு செய்யப்படுகிறது. மேலும் மேற்கண்ட மின்னிணைப்புகளில் ஏற்கனவே செலுத்தப்பட்ட கேட்புத் தொகையை மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பில் வரவு வைத்து எதிர்வரும் மின் கட்டணங்களில் சரிசெய்து கொள்ளுமாறு எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட ஆணையை 30 நாட்களுக்குள் நிறைவேற்றிமைக்கான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் சமர்பிக்கப்படவேண்டமென உத்திரவிடப்படுகிறது.

8.3 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 60/2020 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திரு. M. சௌந்தரராசன்,
4/340 A, ஆயில்காரர் தோட்டம்,
பெத்தாம்பூச்சிபாளையம்,
சாமளாபுரம் அஞ்சல், மஙகலம் வழி,
சோமனூர், திருப்பூர் மாவட்டம் – 641 663.

2. செயற்பொறியாளர்/இ&ப/சோமனூர்,
கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பவர் ஹவுஸ் வளாகம், சோமனூர் – 641 668.

3. உதவி செயற்பொறியாளர்/மஙகலம்,
கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சோமனூர் மெயின் ரோடு,
கனரா வஙகி எதிரில், மஙகலம் – 641 663.

4. உதவி மின்பொறியாளர்/ வேலாயுதம்பாளையம்,
கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
90/2D, சர்ச் ரோடு, பள்ளப்பாளையம் அஞ்சல்,
சாமளாபுரம், சோமனூர் – 641 663.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத், கோயம்புத்தூர் – 641 012.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம் – By Email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுஙகுமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.